12.12.2023

**HMOP. No. 83 / 2023 ம.சா. 2 சரஸ்வதி க/பெ. மாணிக்கம்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் 4,5 ம் வகுப்பு படித்திருப்பேன். எனக்கு 3 குழந்தைகள் என்றால் சரிதான். என் 3 குழந்தைகளுக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். என் மூத்த மகன் சுந்தரத்தின் திருமணமானது நீதிமன்றத்தின் மூலம் ரத்தாகிவிட்டது என்றால் சரிதான். என் மூத்த மகன் சுந்தரத்திற்கு குழந்தை உள்ளதா என்றால் ஒரு குழந்தை உள்ளது, அதற்கு D.N.A. பரிசோதனை கேட்டுள்ளோம். என் 2 வது மகனும் தன் திருமணத்தை ரத்து செய்யகோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் மகளுக்கு ஒரு ஆண் மகன் உள்ளார். அவருக்கு 6 வயது முடிந்து 7 வது வயது நடந்து கொண்டிருக்கிறது. அந்த குழந்தை என் மகளுடன் தான் உள்ளார். அந்த குழந்தையின் பெயர் ஜெயமுருகன். அந்த குழந்தை எங்களுடன்தான் உள்ளதா என்றால் இல்லை, என் மகள் அந்த குழந்தையை வைத்து கொண்டு தனியாக உள்ளார். என் மகள் எங்கு உள்ளார் என்றால் கதவு எண் 57, கீரனூரில் உள்ளார். கீரனூர் எங்கள் ஊரிலிருந்து 50, 60 கி.மீ தூரத்தில் உள்ளது. கீரனூர் புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் தாலுகாவில் உள்ளது. கீரனூருக்கு நான் சென்றுள்ளேன். கீரனூரில் எந்த வீதியில் வீடு உள்ளது என்று வீதி பெயர் தெரியவில்லை, அந்த இடத்தில் ஒரு திருமண மண்டபம் உள்ளது. அந்த திருமண மண்டபத்தின் பெயர் தேவி பாலா. கீரனூரில் எத்தனை வருடங்களாக உள்ளார் என்றால் இந்த வருடம் சென்றுள்ளார், அதற்கு முன்பு காரைக்குடியில் இருந்தார்.என் மகள் காரைக்குடியிலும், கீரனூரிலும் இருந்ததாக கூறுவது பொய், எங்களுடன் எங்கள் வீட்டில்தான் உள்ளார் என்றால் இல்லை. என் மகளின் மகன் எங்கள் உள்ளூரில் உள்ள அரசு பள்ளியில் படித்து வருகின்றார் என்றால் இல்லை. அவர் சென்ற வருடம் கல்லூரில் அரசு பள்ளியில் 1ம் வகுப்பு படித்தார், அப்பொழுது என் மகள் தனியாக தான் இருந்தார். அப்பொழுது என் மகள் கல்லூரில் உள்ள அம்மன் பொட்டல் வடக்கித் தெருவில் ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்தார். என் மருமகன் என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது, கம்பெனியில் இருப்பதாக சொல்வார்கள். என் மருமகன் சென்னையில் உள்ளார். என் மகள் தனியாக குழந்தையை வைத்து கொண்டு தனியாக உள்ளார். இன்றைய தேதிவரை என் மகளின் மகன் கல்லூரில் உள்ள பள்ளியில் படித்து வருகின்றார் , எங்களுடன் ஒரே குடும்பமாக தான் இருந்து வருகிறார் என்றால் இல்லை. என் மகளின் பெயர் கல்லூர் வாக்காளர் பட்டியலில் உள்ளது என்றால் சரிதான், அவ்வப்போது வந்து ஓட்டுப்

போட்டு செல்வார். என் மகளுக்கு குடும்ப அட்டை காரைக்குடி முகவரியில் உள்ளது. என் மகள் எங்களுடன்தான் உள்ளார், அவரது துர்போதனையால் தான் என் மூத்த மருமகள் பிரிந்து சென்றார், என் இளைய மருமகளான எதிர்மனுதாரரும் பிரிந்துள்ளார் என்றால் இல்லை. என் மகளுக்கு இது 3 வது திருமணம் என்றால் இல்லை, 2 வது திருமணம். தாம்பத்யம் என்பது என்ன என்று தெரியுமா, அந்த வார்த்தைக்கு அர்த்தம் தெரியுமா என்றால் குடும்ப வாழ்க்கையில் வாழ்வதுதான். என் மகனான மனுதாரரும், எதிர்மனுதாரரும் தங்களது தாம்பத்யம் பற்றி என்னிடம் வெளிப்படையாக பேசுவார்களா என்றால் எதிர்மனுதாரர் சண்டையில் அசிங்கமாக சொல்லியுள்ளார், என் மகனும் சொல்லியுள்ளார். இந்த தாம்பத்ய உறவு பற்றி அவரது மனுவிலோ, சாட்சியத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்கள் தெற்கு தோட்டத்தில் 12 ஏக்கர் நிலத்தில் கரும்பு போட்டுள்ளோமா என்றால் 2, 3 ஏக்கர் தான் இருக்கும், அதில் கொஞ்சம் கரும்பு போட்டுள்ளோம். எங்கள் தெற்கு தோட்டம் என்பது 4.77 ெஹக்டேர் விஸ்தீரணம் உள்ள நிலம் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எங்கள் மேற்கு தோட்டம் 10 ஏக்கர் இருக்கும் என்றால் இல்லை. போஷன் அண்ணாமலை மகன் மாணிக்கம் என்பது என் கணவர் என்றால் சரிதான். அவர் பெயரில் பட்டா எண் 857 ல் 3.88 ெஹக்டேர் விஸ்தீரணம் நிலம் உள்ளது என்றால் இல்லை. என் பெயரில் பட்டா எண் 2304 ல் 4.77 ெஹக்டேர் விஸ்தீரணம் நிலம் பதிவாகியுள்ளது என்றால் இல்லை. நான், என் கணவர், என் மகன்கள் எல்லோரும் ஒரே குடும்பமாக உள்ளோம் என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**